**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 413/2023**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இஸ்மாயில் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அகமது | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 24th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். தங்கமணி நாடாரைத் எனக்கு தெரியும். 1997ம் வருடம் நான் கடையநல்லூர் மார்க்கெட்டில் மளிகைக்கடை வைத்திருந்தேன். எங்கள் மளிகை கடைக்கு எஸ்.பி.என் ஆயில் மில்லில் இருந்து பாமாயில் எண்ணெய் கொடுப்பார்கள். வாரத்திற்கு ஒருமுறை எஸ்.பி.என் ஆயில் மில்லில் இருந்து வசூலுக்கு தங்கமணி நாடார் வருவார். அவர் எத்தனை ரூபாய் வசூல் என்னிடமிருந்து செய்தார் என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. ஆனால், சுமார் பத்தாயிரம் என்று எனக்கு ஞாபகம் உள்ளது. அவர் கொண்டு வரும் சிட்டையில் நான் வரவு வைத்து கொடுப்பேன். வசூல் செய்து விட்டு சென்ற நாள் இரவு அவர் இறந்து விட்டதாக பின்னர் கேள்விபட்டேன். அவர் சாதாரணமாக எங்கள் ஊரில் என்னை மாதிரி சுமார் 10, 15 கடைகளில் வசூல் செய்வார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

தங்கமணி எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் அவ்வாறு தான் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.25 11:35:54 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 413/2023**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குலாம்மைதீன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | காதர் மைதீன் | தொழில் | : | - |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 73 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 24th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். கடையநல்லூர் பத்மா பெட்ரோல் பல்க்கிற்கு அருகில் பலசரக்கு கடை வைத்திருந்தேன். தற்போது, வியாபாரம் செய்யவில்லை. எஸ்.பி.என் ஆயில் மில்லில் இருந்து கடலை எண்ணெய் கொடுப்பார்கள். வாரத்திற்கு ஒருமுறை எஸ்.பி.என் ஆயில் மில்லில் இருந்து வந்து பணத்தை வசூல் செய்வார்கள். நான் சிறிதாக மளிகைக்கடை வைத்திருந்ததினால் வாரத்திற்கு 1000, 2000 ரூபாய் வசூல் செய்து கொடுப்போம். அதை வரவு வைத்துக்கொள்வார்கள். அவ்வாறு 1997ம் ஆண்டில் ஒரு நபர் பணம் வசூல் செய்து கொண்டு சென்றார். பின்னர், அவர் இறந்து விட்டதாக ஒரு வாரம் கழித்து கேள்விபட்டேன். எங்கள் ஊரில் அவ்வாறு எஸ்.பி.என் ஆயில் மில்லில் இருந்து 10, 15 கடைகளில் வந்து பணம் வசூல் செய்து கொண்டு போவது வழக்கம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** –

எங்கள் கடையிலிருந்து வசூல் செய்து சென்ற தங்கமணி எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.25 11:36:02 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 413/2023</u>**
**<u>வழக்கு சாட்சி PW-5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சண்முக நாடார் | தொழில் | : | ே◌ஹாட்டலில் வேலை |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 24th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் ே◌ஹாட்டலில் வேலை செய்து வருகிறேன். நான் 25 ஆண்டுகளுக்கு முன்பு கடையநல்லூரில் மகேஸ்வரி ஸ்டோர் என்ற பெயரில் மளிகை கடை வைத்திருந்தேன். எனது அப்பா தான் கடையை பார்த்து வந்தார். எஸ்.பி.என்.ஆயில் மில்லில் இருந்து சரக்கு வாங்கிய விபரம் எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் எஸ்.பி.என்.ஆயில் மில்லிருந்து கடலை எண்ணெய், பாமாயில் ஆகியவற்றை வாங்குவது வழக்கம்

என்றால் எனது அப்பா தான் வாங்குவார். எஸ்.பி.என்.ஆயில் மில்லிருந்து வாரத்திற்கு ஒருமுறை கலெக்சனுக்கு தங்கமணி நாடார் என்பவர் வந்து செல்வார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 24.09.1997 ம் வருடம் மாலை 04.45 மணிக்கு தங்கமணிநாடார் எனது கடைக்கு வசூல் செய்ய வந்தார் என்றும், அங்கு பணம் சேராததால் நான் நாளை திருப்பி தருவதாக அவரிடம் கூறி அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. தங்கமணி நாடார் வாடகை சைக்கிளில் எப்போதும் வருவார் என்றால் சரியல்ல. அன்று மாலை 05.00 மணிக்கு பஸ்நிலையத்திற்கு மேல்பக்கம் யாரோ சிலர் அவரை காரில் பணத்துடன் கடத்தி சென்றதாக கேள்விபட்டேன் என்றும், மறுநாள் அவர் தென்காசி ரயில்வே தண்டவாளத்தில் இறந்து கிடந்ததாக கேள்விபட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.25 11:36:10 +0530